புறநானூற்றில் இயற்கையின் இடம்

P. ஆன்சிலின் ஜீவியட்
11- 109, புவன்பாறவிளை, புந்தோப்பு
கண்ணனூர் அஞ்சல்
DOI: https://doi.org/10.5281/zenodo.19220337

ஆய்வுச்சுருக்கம்

மலைகள் காடுகள், ஆறுகள், கடல்கள் ஆகியவை அந்தக் காலத்து தமிழர்களின் வாழ்வியல் சூழலை உருவாக்கின. இயற்கைவளங்கள் பாதுகாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. புறநானூற்றுப் பாடல்களில் அரசர்கள், வீரர்கள், தானம், போர், சமூக மட்டுமல்லாமல் இயற்கைமற்றும் சுற்றுச்சூழல் பற்றிய பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இயைந்திருந்ததை இந்தப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன மலை, காடு, ஆறு, கடல், புல்வெளிபோன்ற இயற்கைவளங்கள் மக்களின் வாழ்க்கையையும் வெவ்வேறு தொழிலையும் தீர்மானித்தன, எனவே புறநானூறு இயற்கையின் அழகையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்கிறது என்பதே இக்கட்டுரையின் முதன்மைநோக்கமாகும்.

முன்னுரை

புறநானூறு பாடல்களில் இயற்கை ஒரு பின்னணி மட்டுமல்ல, அது மனித வாழ்க்கையின் முக்கிய அங்கமாகக் காணப்படுகிறது. இயற்கை வளங்கள் மக்களின் உணவு, தொழில், வாழ்க்கை முறை ஆகியவற்றைதீர்மானித்தன. மழைபெய்து நிலம் வளமாக இருப்பதுமக்களின் நலனுக்கும் செழிப்புக்கும். காரணமாக இருந்தது. இதன் மூலம் தமிழர்கள் இயற்கையை மதித்து வாழ்ந்ததை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

மலைமற்றும் காடுகளின் வர்ணனை

புறநானூறு பாடல்களில் மலைகளின் அழகு மற்றும் காடுகளின் வளம் மிகுந்த உணர்வுடன் வர்ணிக்கப்பட்டன. மலைப்பகுதிகளில் பல வகையான, மரங்கள், மூலிகைக்கள், விலங்குகள்! மற்றும் பறவைகள் இருந்தன. மலைகளில் இருந்து ஓடும் அருவிகள் மற்றும் சிற்றாறுகள் அந்தப் பகுதிகளின் இயற்கை வளத்தை வெளிப்படுத்துகின்றன.

பறம்புமலை, தோட்டிமலை, கொல்லிமலை, இமயம் மற்றும் பொதியமலை ஆகியவை குறிப்பிடத்தக்கது கபிலர் பாடிய பறம்பு மலை *(புறம் 111)*, வன்பரணர் பாடிய கண்டீரக் கோப் பெருநள்ளியின் தோட்டிமலைபுறம் *150)* போன்றவை. இதனை,

"அளிதோதானோ, பேர் இருங் குன்றே!
வேலின் வேறல் வேந்தர்க்கோஅரிதே
நீலத்து, இணை மலர் புரையும் உண்கண்
கிணைமகட்டுஎளிதால் பாடினள் வரினே"
(புறம்:111)

இவை மன்னர்களின் கொடை திறனையும், வலியையும்மலைகளுடன்ஒப்பிட்டுக்கூறுகின்றன. வாழ்க்கைக்கு வேண்டும் கூறுகள் எல்லாம் கொண்டிருத்தலால் தினைஒவ்வொன்றும் தனியுலகம் என்று சொல்லத்தக்க அமைப்புடையது (மாணிக்கனார், வ.சு.ப. தமிழ்க்காதல் *2014* ப:*138)* ஒவ்வொரு நிலத்திலும் மக்கள் வெவ்வேறான வாழ்க்கை முறையினைக் கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது.

ஆறுகள் மற்றும் நீர்நிலைகள்

புறநானூறுபாடல்களில் ஆறுகள் மற்றும் நீர்நிலைகள் பற்றியகுறிப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. ஆறுகள் மக்களின் வாழ்க்கைக்கு. ஆதாரமாக இருந்தன. மழைபெய்து

ஆறுகள் நிரம்பி ஓடும்போது நிலம் வளமாகி விவசாயம் சிறப்பாக நடைபெறும் இதனை

கால் பார் கோத்துஞாலத்து இயக்கும்.
காவல் சாகாடுஉகைப் போன் மாணின்
ஊறு இன்றாகிஆறு இனிதுபடுமே
உய்த்தல் தேற்றானஆயின் வைகலும்
பகைக் கூழ் அள்ளல் பட்டு" (புறம் 185)

என்றபாடல்ஆறுகளின்முக்கியத்துவத்தைக் குறிக்கிறது.

நீர்நிலைகள்மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும். முக்கியமானதாக இருந்தன. குளங்கள், ஏரிகள், ஆறுகள் ஆகியவை அந்த காலத்து மக்களின் வாழ்க்கையை வளமாக்கின இதன் வாயிலாக நீரின் முக்கியத்துவத்தினை அறிந்திருந்தனர் என்பதை உணரமுடிகிறது. "உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே (பாடல்18) என்ற பாடலின் வழி, நீர் நிலைகளின் முக்கியத்துவம் மற்றும் ஆற்றுநீரின் அவசியத்தை புறநானூறு உணர்த்துகிறது.

கடல் மற்றும் கடற்கரை வாழ்க்கை

புறநானூறு பாடல்களில்கடல் வாழ்க்கை பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டனர். கடல் வளங்கள் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவின கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் ஆகும்.

நெய்தல் மலரினால் இந்நிலம் இப்பெயர் பெற்றது. உப்புச் சுவையுடையஅலைகள் ஆர்ப்பரிக்கும் பெரியநீர்ப் பரப்பு மற்றும் பலகானற் சோலைகள் நிறைந்ததாக இந்நிலம் காணப்பட்டது. இந்நிலத்தில் வாழ்ந்த தலை மக்கள் சேர்ப்பன், புலம்பன், பரத்தியர், நுளைச்சியர் எனப்படடனர் வளம் பொருந்திய இந்நிலத்தை,

புணர்ந்துஉடன் கொணர்ந்த
புரவியொடு அனைத்தும்
நெய்தல் சான்றவளம் பவபயின்றுஆங்கு
ஐம்பால் திணையும் கவினிஅமைவர்
என்னும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன.
(மது காஞ்சி 323-325)

இவர்கள் மீன் பிடித்தலை முதன்மைத் தொழிலாகச் செய்தனர். தங்கள் தொழிலுக்குப் பலவகையான வலைகள் கட்டுமரம் படகு போன்றவற்றைப் பயன்படுத்தினர். இவர்கள் செல்லும் திசையறிய கலங்கரை விளக்கைப் பயன்பத்தும் செய்தியை பெரும் பாணாற்றுப்படை 346-351ஆவது பாடலில் காணமுடிகிறது.

மழையினை எதிர்பாராமல் வாழும் கூட்டம் உண்டென்றால் அது நெய்தல் நிலமக்கள் கூட்டமே ஆகும். (முத்துசாமி கருப்பண்ணன், சங்க இலக்கியத்தில் நிலம், 1971 ப: 20) இந்நிலமக்கள் பண்டமாற்றுப் பொருட்களில் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்த உப்பினை எடுத்து வந்து, குறிஞ்சி, முல்லை, மருதம் போன்ற நிலப்பகுதிகளில் விற்று மாற்றுணவுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டனர்.

மழை மற்றும் வளமான நிலம்

மழை தமிழர்களின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாக இருந்தது. மழைபெய்தால் நிலம் வளமாகி விவசாயம் வளர்ச்சி அடையும். புறநானூறு பாடல்களில் மழையின் மகத்துவம் பல இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மழைபெய்து நிலம் செழிப்பாக இருக்கும் போதுமக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். மழை இல்லாத காலங்களில் மக்கள் அவதிப்படுவதைப் பாடல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

சுற்றுச்சூழல் உணர்வு

புறநானூறுபாடல்கள் இயற்கையை மதித்து பாதுகாக்கும் எண்ணத்தையும் வெளிப் படுத்துகின்றன. அந்த காலத்து மக்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தனர். மரங்கள், நீர் நிலைகள், மலைகள் ஆகியவற்றை அவர்கள் பாதுகாத்தளர். இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் அந்தக் காலத்துதமிழர்களிடம் இருந்தது.

நிறைவுரை

புறநானூறு சங்க இலக்கியங்களில் இயற்கை மற்றும்சுற்றுச்சூழலைப்பற்றியமுக்கியமான செய்திகளை வழங்கும் நூலாகும். மலைகாடு, ஆறு, கடல், மழை போன்ற இயற்கை வளங்கள் தமிழர்களின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாக இருந்ததை இந்தப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வாழ்க்கை முறையையும் சுற்றுச்சூழல் பற்றிய அவர்களின் அக்கறையையும் புறநானூறு தெளிவாகக் காட்டுகிறது புறநானூறு இயற்கையையும் சுற்றுச்சூழல் உணர்வையும் வெளிப்படுத்தும் சங்க இலக்கியமாக திகழ்கிறது.

துணைநூற் பட்டியல்

1. ஔவை க. துரைசாமி : புறநானூறு 1967, கழகம் வெளியீடு,சென்னை.
2. மாணிக்கனார் வ.சு.ப: தமிழ்க்காதல் 2014, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை
3. முத்துசாமி கண்ணப்பன்: சங்க இலக்கியத்தில் நெய்தல் களம் 1971, பக்தவத்சலநகர், சென்னை